

மதுரையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தயிர் மார்க்கெட் கடைகள் மற்றும் வளர்ச்சி திட்டப்பணிகளை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் திறந்து வைத்தார்கள்.உடன் நகராட்சி நிருவாகத்துறை செயலர் கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மண்டல தலைவர் முகேஷ் சர்மா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முடியரசனார் ஐம்பெரும் விழாவில் தேவகோட்டை நகர் கழக துணை செயலாளர் எழில் மன்னன் மகள் மகிழ் மதி ஒப்புவித்தல் போட்டியில் வெற்றி பெற்றதற்கான பாராட்டுச் சான்றிதழ் கேடயத்தினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் வழங்கி பாராட்டினார். உடன் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், முன்னாள் அமைச்சர் மூ.தென்னவன்,பல்கலைக் கழக துணைவேந்தர் க.ரவி , மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் ஆகியோர் உள்ளனர்.

### அமைச்சர் இ.பெரியசாமி சிறப்புரையாற்றுகிறார்!

# திண்டுக்கல் கிழக்கு - மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் அர.சக்கரபாணி – இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

திண்டுக்கல், பிப். 16-

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர்அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ. செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-





திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் நாளை (17.02.2025, திங்கட்கிழமை), மாலை சரியாக 04.00 மணியளவில் கழக துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரியசாமி சிறப்புரையாற்ற, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் மூ.காமாட்சி மற்றும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட அவைத்தலைவர் தி.மோகன் ஆகியோரின் தலைமையில் திண்டுக்கல், கலைஞர் மாளிகையில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகரச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: மார்ச் 1, திராவிட மாடல் ஆட்சி நாயகர் கழகத் தலைவர், தமிழக முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா.

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளார்.

### இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில்

# சிவகங்கை - சுந்தரராஜ பெருமாள் கோயிலில் - 12 இணைகளுக்கு இலவசத் திருமணம்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நடத்தி வைத்தார்!

சிவகங்கை. பிப். 16-

சிவகங்கை மாவட்ட இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சிவகங்கை சுந்தரராஜ பெருமாள் திருக்கோயிலில் 12 இணைகளுக்கு திருமணம் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது.

12இணையர்களது திருமணத்தினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் நடத்தி வைத்தார்.

அமைச்சர் கே ஆர் . பெரிய கருப்பன் 12 இணைகளுக்கும் திருமாங்கல்யம் மற்றும் சீர்வரிசை பொருட்களை கொடுத்து வாழ்த்தினார்.தனது சொந்த நிதியாக மணமக்களுக்கு தலா ருபாய் 5ஆயிரம் வீதம் 12 இணையர்களுக்கு ருபாய் 60ஆயிரம் வழங்கினார்.

இந்த விழாவில் கலந்து கொண்டு அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது.

தமிழக முதல்வர் தளபதி அவர்கள் பொறுப்பேற்ற நான்கு ஆண்டுகளில் தமிழக ம் முழுவதும் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கோயில்களில் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டு வருகிறது . கடந்த இரண்டு ஆண்டுகளில் 1100 இவைகளுக்கு திருமணம் நடைபெற்றது. சிவகங்கை மண்டலத்தில் 35 இணைகளுக்கு திருமணம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இன்று 12 திருமணங்கள் நடத்தி வைக்கப்படுகிறது. இந்த திருமணத்தில் மணமக்களுக்கு திருமாங்கல்யம், மணமகன் மணமகள் ஆடை, கைக்கடிகாரம், பீரோ, கட்டில், மெத்தை ,தலையணை, பாய், மிக்சி, குத்துவிளக்கு, காமாட்சி விளக்கு, குக்கர் ,கேஸ் ஸ்டவ் ,பத்துகிலோ அரிசி பூஜை பொருட்கள் மற்றும் சீர்வரிசை பாத்திரங்கள் உபயதாரர்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றது .சுமார் ருபாய் 60,000 மதிப்புள்ள பொருட்கள் ஏழை எளிய மக்கள் திருமணங்கள் நடைபெறும் வகையில் தமிழக முதல்வர்அவர்கள் இத்திட்டத்தினை துவங்கி வைத்து சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இந்த திருமணத்தில் இணையும் இணையர்கள் வாழ்வில் எல்லா வளங்களும் பெற்று சிறப்பான முறையில் தங்களது வாழ்வினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் .திராவிட மாடல் அரசின் நோக்கம் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதாகும். முதல் வர் தளபதி அவர்கள் தலைமையிலான அரசு அனைத்து தரப்பு மக்களையும் அரவணைத்துச் செல்லும் அரசாக விளங்கி வருகின்றது.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

நிகழ்ச்சியில் மண்டல அறநிலையத் துறை இணை ஆணையர் திருமதி பா. பாரதி வரவேற்று பேசினார் இந்த நிகழ்ச்சியில் சிவகங்கை நகர் மன்ற தலைவர்சி. எம்.துரை. ஆனந்த்,

மாவட்ட அறங்காவலர்குழு தலைவர் புவனேஸ்வரி இளங்கோவன் அறங்காவலர் ,குழு உறுப்பினர்கள் ஏ ஆர் .ஜெயமூர்த்தி, கே ஆர். .வெள்ளையன் செட்டியார்,செல்வராஜ், அறங்காவலர்குழு தலைவர்கள் திருமதி ரம்யா தனசேகரன், ஆனந்தி ஆனந்த், ஒன்றிய செயலாளர்கள் திருமலை முத்துராம லிங்கம், எம். ஜெயராமன், தொ.மு.ச. முருகேசன் , சிவகங்கை நகர் மன்ற துணை தலைவர் எம்.கார்கண்ணன்,ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார் மானாமதுரை நகர்கழக செயலாளர் க.பொன்னுச்சாமி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பரணிக்கிட்டு உட்பட மணமக்களின் பெற்றோர்கள் உறவினர்கள் கலந்து கொண்டார்கள்.

கொல்லங்குடி வெட்டுடையார் காளியம்மன் கோவில் செயல் அலுவலர் மாரிமுத்து நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## இரா. காளியப்பன்

**பிப்ரவரி 16 (2008)**



தி.மு.க. தொடக்கக் கால உறுப்பினராகவும் தொடர்ந்து மாவட்ட பிரதிநிதியாகவும் – நான்குநேரி வட்டக் கழக அவைத் தலைவராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் – மூன்று முறை இராதாபுரம் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் – நெல்லை மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஐந்துமாத சிறைவாசமும் – சட்ட எரிப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தமிழக மீனவர் மீது தாக்குதல்! இலங்கை அரசையும் ஒன்றிய அரசையும் கண்டித்து

# இராமேஸ்வரத்தில் இன்று கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

இராமநாதபுரம், பிப். 16-

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தும் இலங்கை அரசையும் அதனை கண்டும் காணாமல் வேடிக்கை பார்க்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இதில் கழக துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்கிறார் என்று மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர், அவர்களின் வழிகாட்டுதலின்படி இன்று (16.02.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.05 மணியளவில் இராமேஸ்வரம், பேருந்து நிலையம் அருகே கழக துணை பொதுச்செயலாளர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் மாபெரும் கண்டனஆர்ப்பாட்டம்நடைபெறவுள்ளது.

ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், மீனவ பெருங்குடி மக்கள் உள்ளிட்ட கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### சிவகங்கை மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் – இன்று

# கழகத் தோழர் மு.மணிகண்டன் - ஆ.முத்துலெட்சுமி மணவிழா!

### பூலாங்குறிச்சியில் நடைபெறுகிறது! குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் வாழ்த்துரை!

திருக்கோளக்குடி, பிப். 16-

சிவகங்கை மாவட்டம் - திருப்பத்தூர் வட்டம் - திருக்கோளக்குடி த.முத்தாவடை - நாகு ஆகியோரின் புதல்வரும், கழகத் தோழருமான மு.மணிகண்டனுக்கும் - சிங்கம்புணரி னுக்கும் - சிங்கம்புணரி - கீழத்தெரு, வி.அண்ணாமலை - உமா ஆகியோரின் புதல்வி அ.முத்து லெட்சுமி (எ) முகில்வாணிக்கும் திருமணம் இன்று (16.2.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் திருக்கோளக்குடி - ஆத்மநாயகி அம்மாள் திருக்கோயிலில் சிவகங்கை மாவட்டச் செயலாளரும் - கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெறுகிறது.



அதனைத் தொடர்ந்து - பூலாங்குறிச்சி, நல்லம்மை ராமநாதன் திருமண மண்டபத்தில் வாழ்த்தரங்க நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்வுக்கு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களும் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பனும் தலைமை வகிக்கிறார்கள்.

ஒன்றியச் செயலாளர் விராமதி மாணிக்கம், ஆவுடையப்பன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சூரக்குடி ஏ.சொர்ணம் வரவேற்புரையாற்றுகிறார்.

கே.எஸ்.ஆனந்தன், கே.எஸ்.ரவி, கே. சுப்பிரமணியன், எஸ். மணிமேகலை, கார்த்திகேயன், அடைக்கப்பன், வி. மாரிமுத்து, ஏ.ஆர். முருகப்பன், ஏ.ஆர்.கண்ணன், வி.நாராயணன், சுப்பையா, மணிகுருக்கள், அம்பிகுருக்கள், நல்லதம்பி, வீரபாண்டியன், சேதுராமன், இளம்பரிதி ஐயப்பன், மாதவன், கண்ணழகன், சுந்தர பாண்டியன், ராஜபாண்டியன், சோமு, மீனாட்சி சுந்தரம், கபிலன், ஏ.எல்.ரவி, ரவிக்குமார், அருணாச்சலம், அழகப்பன், முருகப்பன், வள்ளியப்பன், ஆத்மநாதன், தங்கவேல், சரீர்ராவுத்தர், கே.பாலசுப்பிரமணி, கருப்பையா, பழனிச்சாமி, ராக்கப்பன், அய்யாவு, நல்லமுத்தி பொப்பன், மணிவேல் உள்பட பலரும் வாழ்த்துகின்றனர்.



தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி புதியம்புத்தூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கிரிக்கெட் அணி வீரர்களுக்கு மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன். விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். உடன் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா, மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம்,முன்னாள் சேர்மன் ரமேஷ், ஒன்றிய செயலாளர்கள் செங்குழி ஏ.பி. ரமேஷ்,சதிஷ் குமார்,டி.பி.பாலசிங், பரமங்குறிச்சி இளங்கோ,நவீன் குமார், இளையராஜா, பி.ஜீ.ரவி, ஜெயக்கொடி, தூத்துக்குடி மாவட்டம் பஞ்சாயத்து தலைவர் அ.பிரம்மசக்தி, செந்தூர் மணி, சந்திரசேகரன், பில்லா ஜெகன், மாவட்ட அவைத் தலைவர் அருணாச்சலம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தில் சுற்றுலா துறையின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் நேரில் ஆய்வு மேற்கொண்டார் உடன் சுற்றுலாத்துறை உதவி தலைமை மேலாளர் டேவிட் பிரபாகரன், மாவட்ட சுற்றுலா அலுவலர் பாலமுருகன் உள்ளிட்டோர் உள்ளனர்.